# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 161/1 — 1975 අප්‍රේල් 27 වැනි ඉරිදා — 1975.04.27

161/1 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

சுங்க அறிவித்தல் இல. 73/1/93

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆந் திகதிய 62/9 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பின் கொப்பறாவுக்கான மதிப்பீட்டு கொ. கா. கே. விலை 1975.04.28 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்திற்கு, ரூபா 1,772.33 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பறா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதி தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பறாவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித்தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயத் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1000 தேங்காய்க்குமான ஏற்றுமதி தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 692 26 .. | 937 95 .. | 796 74 .. | 172 87 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

வீ. மார்க்கண்டன்,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. 744/63,
இலங்கை சுங்கம்,
கொழும்பு,
1975.04.27.

---

சுங்க அறிவித்தல் இல. 73/2/92

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆந் தேதிய 69/3 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1975.04.28 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் I இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும் :—

இந்தத் தீர்வை,

(i) 1968 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆம் தேதியில் வெளியிடப்பட்ட 14,793 ஆம் இலக்க அறிவித்தலினால் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் எத்தகைய விவரணஞ்சார் ஒவ்வொரு இறாத்தல் இறப்பர் மீதும் விதிக்கப்பட்ட ஒரே வீதமான மூன்று சதத்துக்கும்,

(ii) சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறுஏதாவது ஓர் எழுத்திலுள்ள சட்டத்தின் கீழ் எத்தகைய விவரணஞ்சார் இறப்பர் மீது விதிக்கத்தக்க, கொடுக்கத்தக்க, ஒரு ஏற்றுமதித்தீர்வைக்கும்,

மேலதிகமானதாதல் வேண்டும் என்றும்,

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இறாத்தல் ஆர். எஸ். எஸ். தரம் I இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப்பெறுமதி | 1 57 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இறாத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை | 0 35 |

வீ. மார்க்கண்டன்,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. 744/64.
இலங்கை சுங்கம்,
கொழும்பு,
1975.04.27.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கவனிக்க.—160/1 ஆம் இலக்கங்கொண்ட அதிவிசேஷ வர்த்தமானித் தொடரின் இறுதி இலக்கம் 160/66.